பேரவை) யில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்து மேலும் தொடரப்பட்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய முப்பத்தாறாவது அறிக்கையையும் நான் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(4) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1978—79 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்தோறாவது அறிக்கை (ஏழாவது) பேரவையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய பரிந்துரையின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய முப்பத்தேழாவது அறிக்கையையும் நான் இப்பேரவைக்கு அளிக்கின்றேன்,

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. இரா. நடேசன். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991—92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆய்வு செய்தல்)

4. சட்டமுன்வடிவுகள்

(அ) நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1992,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தல். 26—3—1992 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1992) ஆய்வுக்கு எடுத்து கொள்ளப் பெற வேண்டுமென்று முன்மொழிந்த தீர்மானத்தின் மீது விவாதம் —தொடர்ச்சி. திரு. ப. ரங்கநாதன், நேற்றைக்கு விட்ட இடத்திலிருந்து தொடரவும்.

TRUTH ALONE TRIUMPHS